# Societal Manifestations within the Ambit of Tamil Literature

**Mr. S. Narendhirakumar**
*Ph.D Research Scholar (Part Time)*
*Assistant Professor, Department of Tamil*
*Thiruthangal Nadar College, Chennai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981743

**Abstract**
*Literature inherently derives its essence from societal foundations. Works that do not resonate with societal realities typically fail to garner public acclaim. Authors generally draw their creative inspirations and conceptual frameworks from the prevailing societal milieu. Consequently, literary productions across various epochs consistently mirror the contemporary societal landscape. Within this framework, the present article, titled "Societal Manifestations within the Ambit of Tamil Literature," meticulously investigates the societal expressions documented in Arivumathi's poetic works. It explores the dynamics of natural transformation, ascertains the presence of empathy for sentient life, delineates its current state, evaluates our collective contribution to environmental conservation, assesses the trajectory of scientific, nuclear, and armament advancements, and examines the pervasive influence of humanism in daily life as articulated through literary discourse.*
***Keywords:*** *Nature, Life's Norms, Agriculture, Nuclear-Weapons, Last Raindrop, Crane's Corpse*

**References**
1. Arivumathi - 'Arivumathi Kavithaigal' (Arivumathi's Poems), Tamizhosai Pathippagam, 797-E, Srirammohan Commercial Complex, Sathi Road, Gandhipuram, Coimbatore – 641012. First Edition: December 1999.
2. Arivumathi - 'Kadaisi Mazhaithuli' (The Last Raindrop), Kavitha Publication, 8 Masilamani Street, Pondy Bazaar, T. Nagar, Chennai – 600017. 4th Edition: 2016.
3. Arivumathi - 'Aayulin Anthivarai' (Until Life's End), Karpagam Puthakalayam, 4/2 Sundaram Street, Near Natesan Park, T. Nagar, Chennai – 17. Published: 2015.
4. Editor - 'Ikkala Ilakkiyam Panmuga Paarvai' (Contemporary Literature: A Multifaceted View), Annai Velankanni College of Arts and Science for Women, Saidapet, Chennai – 15. First Edition: 03.02.2012.
5. Arivumathi - 'Ulaga Amaithikana Nool Purananooru' (Purananooru: A Book for World Peace), Nelli Veliyeedu, Tamil Alai, Chennai – 600086. 1st Edition: 2025.

# தமிழ் இலக்கியச் சூழலில் சமூகத்தின் வெளிப்பாடு

***திரு. சு. நரேந்திரகுமார்***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருத்தங்கல் நாடார் கல்லூரி, சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*இலக்கியங்கள் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றன. சமுதாயத்தை எதிரொளிக்காத எந்த இலக்கியமும் மக்களிடம் வரவேற்பை பெறுவதில்லை. பொதுவாக படைப்பாளிகள் தனது படைப்பிற்கான எல்லாச் சிந்தனைகளையும் இந்த சமுதாயத்திடம் இருந்தே பெற்றுகொள்கிறார்கள். எனவேதான் ஒவ்வொரு கால இலக்கியப் படைப்புகளும் அக்காலச் சமுதாயத்தினைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கின்றன. இத்தகையச் சூழலில் அறிவுமதியின் கவிதைகளில் பதிவுசெய்துள்ள சமுதாயத்தின் வெளிப்பாடுகளைப் பற்றி இயற்கை எவ்வாறு மாற்றம் அடைந்திருக்கிறது அதன் காரணம், உயிர் நேயம் காணப்படுகிறதா? அதன் தற்போதைய நிலை, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நமது பங்களிப்பு, அறிவியல்-அணு-ஆயுதம் வளர்ச்சி எந்நிலையில் உள்ளது, இலக்கியங்கள் வெளிபடுத்தும் மனிதநேயம் வாழ்வியலில் எந்த அளவில் உள்ளன என்பதயெல்லாம் ஆராய்வதாக தமிழ் இலக்கியச் சூழலில் சமுதாயத்தின் வெளிப்பாடுகள் எனும் இக்கட்டுரை அமைகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *இயற்கை, வாழ்வியல் நியதி, விவசாயம், அணு - ஆயுதம், கடைசி மழைத்துளி, கொக்கின்பிணம்*

## இயற்கை

பூமியில் தோன்றிய புல், செடி, கொடி, மரம், பறவைகள், விலங்குகள், மனிதன் முதலிய ஓரறிவு உயிரினங்கள் முதல் ஆறு அறிவு உயிரினங்கள் வரையிலான உயிர் உள்ளனவைகளும், உயிர் அற்றனவைகளும் ஒன்றுடன் ஒன்றாக இணைந்து இருப்பதை இயற்கை எனலாம். செயற்கையாக உறுவாக்க முடியாத அனைத்தையும் இயற்கை என்றும் கூறலாம். இப்பூமியில் தோன்றியுள்ள உயிரினங்கள் அனைத்தும் இத்தகைய இயற்கையுடன் இயைந்த வாழ்கையையே வாழ்ந்து கொண்டுள்ளன. இயற்கையின் வாழ்வியல் நியதி ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்ந்து கொண்டு இருப்பதாகவே உள்ளது. அவ்வியற்கைக்கு இனங்கியே உயிரினங்கள் தங்களுடைய வாழ்க்கையை வாழ்ந்திருப்பதை சங்க காலத்தின் இலக்கியங்களில் காணலாம். ‘பாலும் நெய்யும் வார்த்து மரங்கள் வளர்த்திருப்பதை நற்றிணை 172 வது பாடலும், “மரத்தினைப் பட்டுபோகச் செய்து மருந்தினை பயன்படுத்தாத நிலையை நற்றிணை 226 வது பாடலும்” உணர்த்துகின்றன.

கபிலர் பாடல்களின் வழியாக பாரி இயற்கையோடு பிணைந்த வெற்றி வாழ்க்கைக்கு உரியவராக இருந்திருப்பதையும் சங்க இலக்கிய பாடல், வேள்பாரி எனும் நாவலின் வழியாகவும் அறியமுடிகிறது. அத்தகைய இயற்கையை அழிக்காமல் அவற்றில் தனக்குத் தேவையானவைகளை மட்டும் தேவைக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்ளும் மனம் படைத்தவர்களாகவும் சங்க கால இலக்கிய மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். இயற்கை இல்லாமல் உயிரினங்கள் வாழ முடியாது. மனிதன் தோன்றிய காலம் முதல் இவ்வியற்கைத்தான் அவனைவாழவைத்துள்ளது என்றால் அது மிகையில்லை.

இத்தகைய இயற்கையைக் குறித்து பல்வேறு காலங்களில் படைப்பாளர்கள் தங்களது படைப்புகளின் வழியாக பதிவு செய்து கொண்டே வந்துள்ளனர். அவ்வகையில் கவிஞர் அறிவுமதியின் படைப்புகளில் இயற்கை குறித்த பதிவுகளை காணலாம்.

சமுதாயத்தில் காலம் தோறும் மாற்றம் நிகழ்ந்து கொண்டே வந்திருப்பது ஏற்கத்தக்கது. அம்மாற்றத்தினால் இயற்கையும் மாற்றம் அடைந்திருக்கிறது. அறிவியலின் கண்டுபிடிப்புகள் அதிகமாக அதிகமாக இயற்கையானது பாதிப்பை அடைந்திருக்கிறது. அத்துடன் மனிதர்கள் உடைய ஆசைகள் அதிகரிக்க அதிகரிக்க இயற்கையானது சுரண்டப்பட்டும் கொண்டிருக்கிறது. இயற்கையாக எவ்வித உரங்களுமில்லாமல் மரங்களில் கொத்தியுண்ட கிளிகள் பழங்கள் எல்லாம் இன்றைக்கு அரியவகையாகப் போய்க்கொண்டிருப்பதை

***கிளியுண்ணப் பழம் உண்டா ஆலில்***
***பழமுண்ணக் கிளி உண்டா ஊரில்***

***(கடை.ம. து,1999: 199)***

என்பதன் மூலம் இயற்கை மறந்து விவசாயம் மறந்துவாழ்கின்றவாழ்வைநினைவுபடுத்துகிறது. இவ்வரிகள் கிளிகளையும் கிளிகளின் உணவையும் வஞ்சித்திருப்பதை, பழங்கள் சந்தைகளால் விற்பனையாகி இருப்பதை, மேலும் புழு, பூச்சிவராத வண்ணம் மருந்துகளால் விளை விக்கப்படுவதை, உற்பத்தியில் உயர்வையடைய புதிய ரகங்கள் கண்டுபிடிப்பதை உள்பொதித்து வைத்திருப்பதை விளிக்கச் செய்கிறது. கிளிகளின் கீச்சிடு சத்தங்கள் கேட்டிருந்த ஊர்களிலும் கூட இன்றைக்கு குறைந்திருப்பதை எண்ணச்செய்கிறது. அவற்றையே

***விதையற்ற மாதுளை***
***விதையற்ற திராட்சை***
***விதையற்ற கொய்யா***
***விதையுள்ள மனிதன்***

***(கடை.ம. து,1999: 200)***

என வண்ணதாசன் குறிப்பிட்டிருப்பதின் வழியாக இயற்கையை மனிதன் சிதைத்துக் கொண்டிருப்பதை இன்னும் உறுதிபடுத்த முடிகிறது. மனிதர்கள் மட்டுமில்லாமல் மற்ற உயிரினங்களும் வாழத்தேவையான இயற்கையை மனிதன் தன்சுயநலத்திற்கு ஆட்படுத்தியிருப்பதை தேனீக்கள் தன்னுடைய கூட்டினை மனிதர்களுக்குப் பயந்தே மனித நடமாட்டமில்லாத இடத்தில் கட்டியிருப்பதாக

***வெட்கம் வெட்கம்***
***மூங்கில் புதரின் உச்சியில்***
***தேன்கூடு (பு.நு.ப.து, 1999:135)***

எனக்கூறியிருக்கிறார். தேன் மருந்துதான் எனினும் அவை தேனிகளின் உணவு என்பதை மறந்து மனிதர்களிடம் இயற்கையை கவரநினைக்கும் சுயநலம் அதிகரித்து இயற்கை மீதான அக்கறைக் குறைந்து போயிருப்பதை இத்தேனீ கவிதையைவிட யாராலும் சொல்ல முடியாது. வளர்ப்பு தேன் தொழில் இன்றைக்கு வளர்ந்திருக்கிறது ஆனாலும் அத்தேனிக்களை கொண்டு அதன் சுதந்திரத்தை பறித்து மனிதன் பணம் சம்பாதிப்பதாகவும் எண்ணத்தோன்றுகிறது. இந்த வகையில் அறிவுமதியும் இயற்கையை நேசித்தும் இயற்கையோடுவாழ்ந்தும் இருப்பதை அவரது கவிதைகள் எடுத்துரைக்கின்றன. மரங்களின் மீது அவர்கொண்டிருக்கும் அதீத அன்பை

***மரம் வெட்டிய கோடாரி***
***பார்த்துக் கொள்***
***கடைசி மழைத்துளி (கடை.ம.து, 1999:206)***

என்றுரைத்து மரங்கள் அழிக்கப்படுவதை மனிதர்கள் நிறுத்தவில்லை எனில் மழை கிடைக்காமல் போகும் மழையில்லாமல் இந்த பூமியில் உயிரினங்கள் வாழ்வது இயலாதது என்பதையும் எடுத்துரைக்கிறார். பறவைகள் அடையும் / பெருமரம் எங்கிருக்கிறது / இருள் பரவுமுன் / கேட்ட கடைசிக்குரல் / எந்தப் பறவையினுடையது (அ.க, 1999: 198) என்று பதிவு செய்கிற வண்ணதாசன் கேள்வியும் அச்சிந்தனையின் வெளிபடுகளாகவே உள்ளன.

***விற்பனையில் வண்ணத்துப் பூச்சி***
***துடிக்கிறது***
***பூச்செடி (கடை.ம.து, 1999: 206)***

எனும் கவிதைவழி மனிதர்கள் மனிதத்தை மறந்து அழகுக்கு அடிமையாகி செயற்கையான

சூழ்நிலைக்கு மாறிக்கொண்டிருப்பதைப் புலப்படுத்துகிறது. வண்ணத்துப் பூச்சி வராமல் இருப்பதால்கவலைகொள்வதில்லைமனிதர்கள். கண்ணில் பட்ட விற்பனைக்கு வந்த செயற்கை வண்ணத்துப் பூச்சி வராமல் இருப்பதற்காகப் பூச்செடி துடித்துக் கொண்டு இருக்கிறது. நேசம் கொண்ட சிற்றறிவு உயிர்களின் வலியைக் கொண்டு மனிதர்களின் மனங்களை மீட்டுருவாகம் செய்விப்பதை உணரமுடிகிறது. மேலும் கிளைக்கிடைக்காத சோகம் / அமர்ந்தது புறா / கல்லறைச் சிலுவை (அ.க, 1999: 207), பெருகத்தான் செய்யும் வன்முறை / கேட்கிறதே / மரம் வெட்டும் ஒலி (அ.க, 1999: 206) என்பதுடன்

**காற்றைச்**
**சலி**
**தண்ணீரைக்**
**கழுவு**
**இயற்கையை**
**அணி**
**உடல்வளம்**
**முறுக்கு**
**கலவியில்**
**வெல் (ஆயு.அ.வ, 1999: 170)**

என்கிற இக்கவிஞரின் படைப்பாக்கங்களின் வழியாக மனிதர்கள் தங்களின் தேவைகளை முன்னிருத்தி இயற்கையை மற்ற உயிரினங்களுக்கும் சொந்தமானது என்பதை மறந்து தனதாக்கிக் கொண்டிருக்கும் வஞ்சகம் மிக்கவர்களாக இச்சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

## உயிர் நேயம், மனிதநேயச் சிந்தனைகள்

நேயம் என்பது அன்பு என்று பொருள்படுகிறது. உயிர்நேயம் என்பது உயிர்களிடம் கொண்டிருக்கும் அன்பு எனலாம். மனிதன் மற்ற உயிர்களின் மீதாகட்டும் மற்ற உயிர்கள் மனிதர்களின் மீதாகட்டும், விலங்குகள் உயிரற்ற பொருள்கள் என எந்த பாகுபாடும் இல்லாமல் ஒருவர் மற்றவர்களின் மீது காட்டுகின்ற அன்பை, பரிவை, கருணையை உயிர்நேயம் என கூறலாம். எந்த ஒரு உயிரும் மற்ற உயிரின் வலியைப் புரிந்து மற்றவைகளுக்கு அவ்வலியைக் கொடுக்காமல் இருப்பதை உயிர்நேயம் எனவும் கூறலாம். அத்தகையத்தளத்தில் வாடியப் பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் (திருவருட்பா) நெடுவழிச் சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய பறம்பிற் கோமான் சிறுபாணாற்றுப்படை 87-91, குறுநடை புறவின் தபுதி யஞ்சிச் சீரை புக்க வரையா ஈகை உரவோன் மருக புறநானூறு 43 என்கிற பாடல்களின் மூலம் மனிதர்கள் அனைத்து உயிர்களுக்காகவும் சிந்தித்த உயிர் நேயச் சிந்தனை இன்றைக்கு மனிதர்களிடையே குறைந்து சண்டைகளும் பிரிவுகளும் மேலோங்கியிருப்பதை

**அவன் வயல் இவன் வயல்**
**என்வயல் உன்வயல்**
**வேகமாய்ப் பறக்கும் புறா**
**(பு.நு.ப.து, 1999: 140)**

என்கிற கவிதைகளில் நிலத்தின் மீதுள்ள சொத்தின்மீதுள்ள மோகத்தில் உறவுகளை மறந்து அங்கு உணவு உண்ணவரும் உயிரினங்களை மறந்து மனிதன் அன்பை மறந்து வாழ்வதை எடுத்துக் காட்டியுள்ளார்.

**ஈரமற்ற நிலம்**
**வெடிப்பில் கிடக்கிறது**
**கொக்கின் பிணம் (கடை.ம.து, 1999: 206)**

ஆகிய கவிதைகளில் நகரமயமாக்கச் சூழலில் மனிதர் தங்களின் தேவைக்காக எண்ணற்ற மரங்களை அழிதல், அதனால் காடுகள் அழிந்து மழைக்குன்றிவிடுதல் வனவிலங்குகள், பறவைகள் அழிதல் ஆகியவற்றைப் பதிவு செய்கிறார். விவசாயம் செய்கிற கூலிமக்கள் நாள்முழுக்க வேலைச் செய்தாலும் வருமானம் இல்லாத நிலையில் தங்களது பசியினை போக்கிக்கொள்ள போதுமான நெல் கிடைக்காமலிருப்பதை

**கூலி விவசாயி**
**பசி**
**எலி வலைக்குள் நெல் (பு.நு.ப.து, 1999: 140)**

எனும் கவிதையில் தெரியப்படுத்துகிறார். மனிதர்கள் தங்களைத் தவிர மற்ற உயிரினங்களின் வாழ்வியலில் கவனம் செலுத்துவதில்லை. வெய்யிலின் வெம்மை எல்லோரையும் துன்புறுத்த

***நடுப்பகல்***

***சுடுமணல்***

***பாவம் என் சுவடுகள் (பு.நு.ப.து, 1999: 135)***

எனக் கவிஞர் வெய்யிலோடு நேரடி தொடர்புடைய பாதங்களின் துன்பமறிந்து பாதங்களுக்காகக் கவலைகொள்பவராக இருக்கிறார் என்பதை எல்லாம் இவருடைய படைப்பின் மூலம் உணரமுடிகிறது.

அன்பே அறனே இன்பம் நாணொடு துறந்த ஒழுக்கம் பழித்து (தொல்காப்பியம் 210) நல்லார் ஒருவர் உளரேல் எல்லார்க்கும் பெய்யும் மழை (மூதுரை 10) யாதும் ஊரே யாவரும் கேளிர் (புறம் 192) உண்டிக் கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (புறம் 18) அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு (குறள் 80) என்பது மட்டுமில்லாமல் குறள் 45ல் இல்வாழ்க்கையின் பயன் என்பது அன்பும் அறனுமே என்கிறது திருக்குறள். மேற்கண்ட இலக்கியங்கள் மட்டுமல்லாது நீதி, பக்தி, தற்கால இலக்கியம் மற்றும் காப்பியங்கள் எனப் பல்வேறு இலக்கிய, இலக்கணங்களும் மனிதநேயத்தை எடுத்துரைக்கிறது.

இவற்றினூடாக அறிவுமதியின் 'தங்கத்தமிழ்' ஆனந்த விகடன் வார இதழில் முப்பத்தி ஐந்து வாரங்கள் தொடர்ந்து வெளியான தொடர் கவிதைகளில் சங்க இலக்கிய விழுமியங்களை உள்வாங்கிக் கொண்டு கவிஞர் இன்றைய மனிதர்களின் மனிதநேயத்தைத் தன்மதிப்பீட்டிற்கு உள்ளாக்குகிறார். புணரி பொருத பூ மணல் அடைகரை (நற்றிணை 11) எனும் உலோச் சனாரின் பாடலில் தன் தலைவியை மணந்து கொள்ளும் விருப்பத்தோடு தேரில் வருகின்ற நெய்தல் நிலத்தலைவன் கடற்கரையில் நண்டுகள் மேய்ந்து விளையாடிக் கொண்டு இருப்பதை அறிந்து பாகனை விழிப்புடன் தேர்ச்சக்கரம் நசுக்கிவிடாதபடிக்கு ஓட்டப் பணித்திருப்பதைச் சங்க இலக்கியப் பாடல் வழி அறிகிறோம். இத்தகைய மனிதத்தன்மையுடன் இருந்த நெய்தல் நிலத்தைச் சேர்ந்த நண்டுக்கு இரக்கம் காட்டிய மக்களை இன்று இரக்கமில்லாமல் எவன் எவனோ சுடச்சுடச் செத்து மிதக்கின்ற நடைமுறை செயல்களை ஒப்புமைப்படுத்தி நம் மனிதநேயத்தை நான்காவது தொடரின் கவிதை வழியாகச் சுட்டிக்காட்டுகிறார் கவிஞர்.

கபிலர் பாடிய அகநானூறு 248 வது பாடலில் குன்றநாடனின் வேட்டைநாயைத் துரத்தியடித்த காட்டுப்பன்றியின் வீரச்செயலையும் தன் வில்லிற்கு அஞ்சாத வீரத்தன்மையையும் பார்த்து "இந்தப் பன்றி என்னைப் போன்று வீரம் கொண்டது எனவே இதைக் கொள்ளமாட்டேன்' என்று பன்றியின் வீரத்தினை தனக்குச் சமமாக மதித்து உயிருடன் விட்டுவிட்டு பசியுடன் திரும்பியிருக்கிற அறத்தின் வீரச்செய்தியை கவிஞர் பதிவிட்டு இவருடைய 11வது வாரத் தொடரில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த மனிதர்களின் அறம் சார்ந்த வீரத்தினை, பசியெனும் நோயைக் கொள்ளுகின்ற உணவு கைக்குக் கிடைத்ததாகக் கருதிய நேரத்திலும் அவர்களால் மற்ற உயிர்களிடம் அறத்தோடு வீரத்தோடு மனிதநேயத்தோடு இருந்திருப்பதை உணர்ந்துகிறது. அதோடு மட்டுமில்லாமல் இலங்கையில் போரின் பெயரில் நடத்திய அறம் இல்லாத இசைப்பிரியா, பாலசந்திரனின் படுகொலைகளை நினைவுப்படுத்திச் சமுதாயத்தின் மனிதநேயத்தை பதம் பிடித்து எழுதியுள்ளார். நற்றிணை 35 வது பாடலில் ஒரு நாவல் பழத்தினைத் தொட்ட நண்டினை தன் இன வண்டினைத்தான் அலவன் கொண்டு செல்கிறது என்றுத்தவறாக எண்ணி வண்டுகள் ஒற்றுமையுடன் தாக்கியதை மனத்தில் இருத்தி இப்படுகொலைக்கு நம் ஒவ்வொருவரின் செயல்பாட்டினை குறித்தும் உயிர் நேயத்தினைக் குறித்தும் மனிதநேய அறத்தினைக் குறித்தும் சுய மனிதத்தைக் கேள்விக்கு உள்ளாக்கி இருப்பதை உணரலாம்.

'காக்கை குருவி எங்கள் சாதி', 'எல்லோரும் இன்புற்று இருக்க' என்றெல்லாம் நாம் சொல்லிக்கொண்டே இருக்கிறோம். இவற்றை நப்பாலத்தனார் அகநானூறு 204 வது பாடலில் தண்ணுமை எனும் சிறு இசைக்கருவியை அறுவடைக்கு முன் வயலுக்குக் கொண்டுச் சென்று ஒலியெழுப்பவர். அவ்வயலில் குஞ்சிப்

பொரித்திருக்கும் குருவிகள், அவையம் வந்திருக்கும் குருவிகள் முட்டைகளுடன் குஞ்சுகளுடன் பாதுகாப்பான இடத்திற்குச் சென்றுவிடச் செய்யும். இவ்வாறான உயிர் நேயத்துடன் மனிதர்கள் இருந்திருக்கின்ற சமுதாயத்தை அப்பாடல் எடுத்தியம்புகிறது. இத்தகைய சிந்தனையை இயல்பாகவே உள்வாங்கிய கவிஞர்

**அந்தப் பழுத்த இலையில்**
**இரண்டு எறும்புகள்**
**காற்றே மெல்ல மெல்ல**
**(பு.நு.ப.து, 1999: 133)**

என எறும்புகளுக்காக இரங்கும் பண்பினையும்

**தூங்கும் போது எதற்குத் தொந்தரவு**
**இருஇரு மெல்ல எடுத்து விடுகிறேன்**
**கடித்த எறும்பே (பு.நு.ப.து, 1999: 139)**

எனத் தன்னைக் கடித்த எறும்புவிற்காகவும் பரிவு கொண்டு இருப்பதையும் தனது கவிதைகளில் பதிவு செய்திருக்கிறார்.

மரம் சா மருந்தும் கொள்ளார் (நற்றிணை 226) பாடலினை குறிப்பிட்டு உயிரைக்காக்கும் நோய்கான மருந்து மரத்தில் இருக்கிறது என்றால் இலைகளையோ பூக்களையோ பரிக்கச் சம்மதிப்பேன் அம்மரத்தைக் கொன்று எனது உயிரைக் காக்கவேண்டும் என்றால் எனது உயிரைவிடுவேனே தவிர மரத்தைக் கொள்ளச் சம்மதிக்க மாட்டேன் என்கிற உயரிய சிந்தனை வெளிபடுத்தியுள்ளார். இவற்றில் மரத்தினை வெட்டி, அழித்து, சாய்த்து என்றெல்லாம் சொல்லாமல் கொன்று என்று விளிப்பதிலே மரமும் மனிதர்களை போன்று மதிக்கப்படுவதை உணரமுடிகிறது. இவற்றையொல்லாம் கொண்டே அறிவுமதி ஓர் இனத்தின் பண்பாட்டு விழுமியம் என்பது அந்த இனம் மற்ற மக்களை எவ்விதம் மதித்து வாழ்ந்தது என்பதில் இல்லை, மற்ற உயிர்களை எவ்விதம் மதித்து வாழ்ந்தது என்பதில் இருக்கிறது (த. த - 27 வது தொடர்) என வரையறை செய்திருக்கிறார் கவிஞர் என்பதை அறியமுடிகிறது.

**சுற்றுச்சூழல்**

சு.கீணனூரில் பிறந்து காசு கொடுத்து மீன் வாங்காத இயற்கை வளங்களுக்குச் சொந்தக்காரார் கவிஞர். சோளக் கொள்ளை, கம்மங் கொள்ளைகளில் சுற்றி மணிமுத்தாற்றில் குளித்து வாழ்ந்திருக்கும் வாழ்கைக்குச் சொந்தக்காரர். நீர், நிலம், காற்று, வானம் என தன்னைச் சுற்றியிருக்கும் தன்னோடு இணைந்திருக்கும் சூழலை சுற்றுச்சூழல் எனலாம். அச்சுற்றுச் சூழல் இன்றைக்கு மாசு அடைந்திருப்பதை முதன்மைப்படுத்தும் சிந்தனைகளும் கவிஞரின் படைப்புகளில் காணப்படுகின்றன. வயல்களில் ஆரல் மீன்கள் இருந்திருப்பதை குறுந்தொகை பாடல் 25 என்பதைப் போன்று பல நூல்களும் நமக்கு கூறியிருக்கிறது. அத்தகைய நிலை இன்றைக்கு இறால் வளர்ப்பு என்கிறச் சூழலில் பெரும் வணிகமாக மாற்றப்பட்டிருக்கிறது. இறால் வளர்க்கப்படும் நிலங்களும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் விவசாயம் செய்யமுடியாத தரிசு நிலமாக மாறிவிடுகிற நிலை ஏற்படுவதை கவிஞர்,

**வயலிலுமா விளையாடின மீன்கள்**
**வயலையே விளையாடுகின்றன**
**இறால்கள் (கடை.ம.து, 1999: 206)**

என சுட்டிக்காட்டுகிறார். நெய்வேலியில் நிலக்கரி மின்சார உற்பத்தியைப் பற்றிய அவரது கவிதைகள் நிலக்கரி எடுப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு, நிலங்களை இழந்த மக்களின் வலி வேதனை, விலங்குகள், பறவைகள் அழிவு ஆகியவற்றை 'நெய்வேலி' என்னும் கவிதையில் பதிவு செய்கிறார்.

**கரிக்காடுகளின் மரணச்சடை பிடித்து**
**வெளித்தூக்கும்**
**அறிவியலின் இரக்கமற்ற**
**எசமான் சேவகத்திற்குக்**
**காவாய்**
**கௌதாரி முயல் காடையுடன்**
**பசுமை தெவிட்டாத வானம் சுவாசிக்கும்**
**காடும் (மணி.ஆ.க, 1999: 262)**

என சங்க கால மக்கள் இயற்கையோடு வாழ்ந்த மரபை அடியொற்றி கௌதாரி, முயல்,

காடையுடன் காடுகளையும் அறிவியல் விழுங்கிக் கொண்டு இருக்கின்ற நிலையை கவிஞர் அறிவுமதி சிந்தித்துள்ளார். இத்தகைய நிலையினை நீட்டிக்காமல் இருக்க வேண்டும் என்பதை

***தொழில்கள்***
***துப்பும்***
***நச்சுக்***
***காற்று***
***பெருகும்***
***வறட்சி***
***விரியும்***
***பாலை***
***திணறும்***
***பருவம்***
***வாழ்க்கையை***
***மலர்த்து***
***காடுகள்***
***வளர்த்து*** ***(அணு.தி.அ, 1999: 168)***

என்று நச்சுகளினால் நிலமானது பாலையாகிவிடும், ஆகவே காடுகளை வளர்த்து தங்களின் வாழ்க்கையை மலரச் செய்யுங்கள் என்கிறார்.

### அறிவியல்-அணு-ஆயுதம்

அறிவியலும் அணு ஆயுதமும் ஒரு நாட்டினுடைய வளர்ச்சியை குறிப்பவைகள். பகை நாடுகளிடமிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள பெரிதும் உதவுகின்றவை. அணுக்கரு, கதிர்வீச்சு போன்ற துறைகளின் வளர்ச்சியாகக் காணலாம். அணுக்கரு இணைவு, பிளவுகளின் மூலம் பேரழிகளை ஏற்படுத்தக் கூடியது. 1945 இல் இரோசிமா நாகசாகி நகரங்களின் மீது வீசப்பட்ட சின்னப் பையன், கொழுத்த மனிதன் எனும் பெயர்களைக் கொண்ட அணுகுண்டிற்கு சுமார் 1,20,000 பேர் பலியாகியிருப்பதாக கூறுவர். சமீபத்திய ரஷ்யா உக்ரைன் நாடுகளின் போர்களில் கூட பெரும் அழிவை உண்டாக்கியது அறிந்ததே. இத்தகைய அணு ஆயுதங்களின் பயன்பாட்டினால் அறிவியலின் வளர்ச்சியினால் சமுதாயத்தில் ஏற்படுகிற இழப்புகளை எண்ணி இவ்வாறு படைத்திருக்கிறார்.

***எப்படி வரும் கடற்காக்கை***
***கடல் நெடுக***
***பெட்ரோலியக் கசடு***

***(கடை.ம.து, 1999: 208)***

என கடல் பாதிப்படைவதால் கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்புக்கு உள்ளாவதை

***தொண்டை முட்ட***
***அணுக் கழிவு***
***ஓங்கரிக்கும் மீன்கள்***

***(கடை.ம.து, 1999: 208)***

என்றும்

***அணுச்சோதனை***
***பிணமாய் ஒதுங்கின***
***அலைகள்*** ***(கடை.ம.து, 1999: 208)***

எனவும் கடல் முழுவதும் கசடுகளாவதால் கடற்காக்கைகள் மீன்கள் மட்டுமில்லாமல் கடலின் அலைகளே பிணமாகிக் கொண்டு இருப்பதை சுட்டிக்காட்டுகிறார். இத்தகைய ஆயுதங்களை பயன்படுத்தப்படாதப் பொருள்களாக ஆக்கவேண்டும் என்பதை,

***ஆயுதங்களை***
***இரசி***
***அருங்காட்சியகத்தில்***

***(கடை.ம.து, 1999: 207)***

என்று கூறுகிறார். அவற்றுடன்

***துப்பாக்கி***
***பீரங்கி***
***பசி***
***பசி***
***போர்க்கப்பல்***
***போர் விமானம்***
***பசி***
***பசி***
***அணுகுண்டு***
***நியூட்ரான்***
***குண்டு***
***பசி***
***பசி***
***நட்சத்திர யுத்தம்***
***அணு உலைக்***

***கசிவு***
***அச்சம்***
***வேண்டாம்***
***மனிதம்***
***காக்க***
***மனிதரே***
***வருவார் (அணு.தி.அ, 1999: 171)***

என்கிற அள்விற்கு மனிதத்தன்மை குன்றியவர்களாக இன்றைக்கு மனிதர்கள் மாறிக்கொண்டு இருப்பதை உணர்த்திக் காட்டுகிறார். மனிதத்தன்மை இல்லாத மனிதர்களுக்கு மத்தியில் அணு ஆயுதங்களின் பயன்பாடுகளை புரிந்துகொண்டு அவற்றை அருங்காட்சியகப் பொருள்களாக மாற்றுகின்ற சிந்தனையாளராகவும் இருக்கிறார். மேலும்

***ஆலைகள்***
***பெருக்கு***
***கனி***
***வளம்***
***உருக்கு***
***தொழில்***
***நிலை***
***உயர்த்து***
***அனைத்தும்***
***சரிதான்***
***இயற்கையை***
***மகிழ்ச்சி***
***செய் (அணு.தி.அ, 1999: 153)***

தொழிற்சாலைகளை அதிகரிப்பதவும் கனிம வளங்களை உருக்கி எடுப்பதவும் தொழிற் சாலைகளினால் தொழில்களை உயர்த்து வதும் என எல்லாம் செய்வதுவும் சரிதான் ஆனால் இயற்கையை மறந்துவிடுகிறோம். இயற்கையினை சுரண்டிவிடுகிறோம். பெரும் அழிவுகளுக்கு வழிவகுக்கும் வகையில் இயற்கையை அழித்துக்கொண்டு இருக்கிறோம் என்கிறார். அனைத்து உயிரினங்களுக்கும் சொந்தமான இயற்கையை மனிதர்கள் மட்டுமே கவனம் கொள்ளாமல் அழித்துக்கொண்டு இருக்கிறோம். இதனை தனது கவிதைகளின் வழியாக உணர்த்தி இயற்கையை மகிழ்விக்க வளர்க்க பாதுகாக்க வேண்டும் என்பதை அறியச்செய்கிறார். அணு ஆயுதங்களினால் அமைதியை இழந்திருக்கும் நமக்கு போர் நூலாகக் கருதப்படுகிற புறநானூறையே தனது சிந்தனைகளில் ‘உலக அமைதிக்கான நூல் புறநானூறு’ என்று அறிவுமதி படைத்திருப்பதன் மூலமும் இவர் உலகத்தில் போர் இல்லாத அணு ஆயுதங்கள் இல்லாத இயற்கையை பாதிக்காத எல்லா உயிரினங்களிடமும் அன்பு செலுத்திகிற மனிதத்துவத்தை முன்மொழிகிறார் என்கிற கருத்தையும் அறியமுடிகிறது.

## தொகுப்புரை

ஒவ்வொரு படைப்பாளியும் தன் காலத்தில் நிகழும் சமுதாயச் சிக்கல்களை தன் படைப்புகளில்கையாண்டுஅவற்றைபலஆண்டு களுக்குக் கடத்திக் கொண்டு வந்திருப்பதையே பெரும்பாலும் படைப்பு இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. மனிதர்கள் தங்களின் தேவைகளை முன்னிருத்தி இயற்கையை மற்ற உயிரினங்களுக்கும் சொந்தமானது என்பதை மறந்து தனதாக்கிக் கொண்டிருக்கும் வஞ்ச கம் மிக்கவர்களாக இச்சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

அனைத்து உயிர்களுக்காகவும் சிந்தித்த உயிர்நேயச் சிந்தனை இன்றைக்கு மனிதர்களிடையே குறைந்து சண்டைகளும் பிரிவுகளும் மேலோங்கியிருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. மனிதன் அன்பை மறந்து வாழ்வதை எடுத்துக் காட்டியுள்ளார். ஓர் இனத் தின் பண்பாட்டு விழுமியம் என்பது அந்த இனம் மற்ற மக்களை எவ்விதம் மதித்து வாழ்ந்தது என்பதில் இல்லை, மற்ற உயிர்களை எவ்விதம் மதித்து வாழ்ந்தது என்பதில் இருக்கிறது என வரையறை செய்திருக்கிறார்

இயற்கையோடு வாழ்ந்த மரபை அடியொற்றி கௌதாரி, முயல், காடையுடன் காடுகளையும் அறிவியல் விழுங்கிக்கொண்டு இருக்கின்ற நிலையையும் எடுத்துக்கூறியுள்ளார். மனிதத்தன்மை இல்லாத மனிதர்களுக்கு மத்தியில் அணு ஆயுதங்களின் பயன்பாடுகளை

*புரிந்துகொண்டு இயற்கையை எல்லாருக்கு மானதாக தனது படைப்புகளின் வழியாக உணரச்செய்வதை அறிய முடிகிறது. இவர் உலகத்தில் போர் இல்லாத அணு ஆயுதங்கள் இல்லாத இயற்கையை பாதிக்காத எல்லா உயிரினங்களிடமும் அன்பு செலுத்திகிற மனிதத்துவத்தை முன்மொழிகிறார் என்கிற கருத்தையும் அறியமுடிகிறது*

## துணைநூற்பட்டியல்


1. *அறுவுமதி - 'அறிவுமதி கவிதைகள்' தமிழோசை பதிப்பகம், 797 - இ, சிரீராம்மோகன் வணிக வளாகம், சத்தி சாலை, காந்திபுரம், கோவை. முதல் பதிப்பு: டிசம்பர் 1999.*
2. *அறிவுமதி - 'கடைசி மழைத்துளி' கவிதா பப்ளிகேஷன், 8 மாசிலாமணி தெரு, பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 600017. 4 ஆம் பதிப்பு: 2016.*
3. *அறிவுமதி - 'ஆயுளின் அந்திவரை' கற்பகம் புத்தகாலயம், 4/2 சுந்தரம் தெரு, நடேசன் பூங்கா அருகில், தியாகராயர் நகர், சென்னை - 17. பதிப்பழகு 2015.*
4. *பதிப்பாசிரியர் - 'இக்கால இலக்கியம் பன்முகப் பார்வை' அன்னை வேளாங்கண்ணி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை - 15. முதல் பதிப்பு: 03.02.2012.*
5. *அறிவுமதி - 'உலக அமைதிக்கான நூல் புறனாநூறு' நெல்லி வெளியீடு, தமிழ் அலை, சென்னை. 1 ஆம் பதிப்பு: 2025.*